வலயக்கல்வி அலுவலகம் -கல்குடா

கொரோனா விடுமுறைகால செயலட்டை-2020

வினாப்பத்திரம்-08

தரம்-07 பாடம்-நாடகமும் அரங்கியலும் திருமதி.ர.திருவரங்கன்

## அலகு - வெகுசன ஊடகங்கள் , துணைக்கலைகள்

**01. வெகுசன ஊடகம் என்றால் என்ன?**

- வெகு என்றால் தொலைவு என்றும் ஜனம் என்றால் மக்கள் எனவும் பொருள்படும் அதாவது தொலைவில் உள்ள பெருந்தொகையான மக்களுக்கு ஒரே நேரத்தில் தகவலை வழங்கும் ஊடகங்கள் வெகுசன ஊடகம் எனப்படும்.

**02. வெகுசன ஊடகங்களுள் உள்ளடங்கும் ஊடக வடிவங்கள் யாவை?**

- அச்சு ஊடகம், இலத்திரனியல் ஊடகம், நவீன ஊடகம்', சமூக புதிய ஊடகங்கள்

**03. அச்சு ஊடகங்களுக்கு உதாரணம் தருக.?**

- பத்திரிகை, சஞ்சிகை, புத்தகங்கள், கையேடுகள், நாவல்கள், இலக்கியங்கள்

**04. இலத்திரனியல் ஊடகங்களுக்கு உதாரணம் தருக?**

- வானொலி, தொலைக்காட்சி

**05. அச்சு ஊடகங்களில் வெளிவரும் நாடக எழுத்துருக்களின் இயல்புகள் யாவை?**

- எழுத்து மொழி வடிவில் காணப்படுதல்
- வாசித்து அறியக்கூடிய தன்மை கொண்டது
- தேவையான போது மீட்டிப்பார்க்கக் கூடியது
- இலகுவில் சேமித்து வைத்து மீளப்பார்க்கப்படும்
- வாசிப்பாற்றல், கற்பனையாற்றலை வளர்க்க முடியும
- .

**06. இலத்திரனியல் ஊடகமான வானொலி, தொலைக்காட்சி ஊடகங்களின் இயல்புகள் யாவை?**

- கேட்டும் பார்த்தும் ரசிக்கக்கூடியது
- மொழியாற்றல் குறைவானோரும் கேட்டும் பார்த்தும் ரசிப்பார்
- கற்பனை ஆற்றலை அதிகம் கொண்டிருக்கும், வளர்க்கவும் செய்யும்.
- அரங்க மூலகங்களின் பயன்பாடு அதிகமாகக் காணப்படும்
- பார்வையாளர்களை இலகுவில் அதிகம் கவரக்கூடியது

www.lkedu.lk

**07. தொலைக்காட்சி நாடகம் உருவாக்கப்பட்டதன் நோக்கம் யாது?**

- ரசிகர்களான பார்வையாளர்களின் பொழுதுபோக்கு. மகிழ்வூட்டல்

**08. இலங்கையில் முதன்முறையாக உருவாக்கத்தட்ட தொலைக்காட்சி நாடகம் எது?**

- 1984 ல் டி.பி நிகால் சிங்காவினால் உருவாக்கப்பட்ட திமுது முது

**09. தற்காலத்தில் தொலைக்காட்சியில் மக்களால் அதிகம் விரும்பப்படும் பல்சுவை தொலைக்காட்சி நிகழ்ச்சி யாது?**

- மெய்மை நிகழ்ச்சிகள் (Reality show)
-

**10. அச்சு ஊடக நாடகங்களுக்கும் இலத்திரனியல் ஊடக நாடகங்களுக்கும் இடையிலான வேறுபாடுகள் யாவை?**

| அச்சூடகம் | இலத்திரனியல் ஊடகம் |
|---|---|
| எழுத்து வடிவத்தினை மாத்திரம் கொண்டது | ஒலி, ஒளி. எழுத்து என அனைத்து வடிவத்திலும் வெளிப்படுத்தப்படுவது |
| எழுத்து வடிவ மொழியறிவு உள்ளவர்கள் மாத்திமே வாசித்தறிய முடியும் | மொழியறிவு, கேட்டல் அறிவு, பேச்சாற்றல் உள்ளவர்களால் பயன்படுத்து முடியும் |
| தேவையான இடங்களுக்கு இலகுவில் கொண்டு செல்லலாம் | தேவையான இடங்களில் பயன்படுத்த குறிப்பிட்ட இடத்தில் மின்சாரம் அவசியம் |
| தனியொருவரால் எழுத்து மூலம் சாத்தியப்படும் | பலரின் கூட்டு முயற்சியால் உருவாக்கப்பட்டது. |

www.lkedu.lk

**11. அரங்க துணைக்கலைகள் சில தருக?**

- வேடவுடை
- ஓப்பனை
- காட்சியமைப்பு
- ஓளி
- ஓலி
- இசை
- அரங்கப்பொருட்கள்

**12. வானொலி நாடகத்தில் பயன்படும் துணைக்கலை அம்சய்களைக் குறிப்பிடுக,?**

- இசை, ஒலி, பாடல்

**13. நாடகமொன்றின் வெற்றியில் அதிகம் பங்கெடுக்கும் சாதனங்கள் யாவை?**

- அரங்க துணைச்சாதனங்கள் ஆகும். இதனை அரங்க துணைக்கலைகள், அரங்க மூலகங்கள் எனவும் அழைப்பர்